செ.வெ.எண்.63 நாள்: 26.11.2017

பத்திரிக்கைச் செய்தி

திருநெல்வேலி மாவட்டம், நான்குனேரி வட்டம், தெற்கு நான்குனேரி கிராமம் , வீராங்குளம் என்ற முகவரியைச் சார்ந்த திருமதி.நம்பி நாச்சியார் (வயது 44) த/பெ.சுடலை முத்து என்பவர் 22.11.2017 அன்று ஆலடிப்புதூர் கிராமத்தில் வைத்து மின்னல் தாக்கி உயிரிழந்தார். பேரிடர் நிவாரண நிதியிலிருந்து இன்று (26.11.2017) மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் வைத்து மாண்புமிகு.ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்இராஜலட்சுமி அவர்களால் பேரிடர் நிவாரணத் தொகையாக ரூ.4,00,000/- ரூபாய் நான்கு இலட்சத்திற்கான காசோலையினை இறந்த திருமதி.நம்பி நாச்சியாரின் தாயார் திருமதி.பார்வதி, த/பெ.சுடலைமுத்து என்பவருக்கு வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் திரு.முத்துக் கருப்பன் மற்றும் திருநெல்வேலி பாராளுமன்ற உறுப்பினர் திரு.கே.ஆர்.பி.பிரபாகரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளா ் பொது திரு.சுப்பையா, திருநெல்வேலி கோட்டாட்சித்தலைவர், இல.மைதிலி, அலுவலக மேலாளர் திரு.சிவக்குமார்.ஆகியோர்கள் கலந்துகொண்டனர். முக்கிய பிரமுர்கள். திரு சுதா.கே.பரமசிவன், திரு தச்சை.கணேசராஜா, திரு பரணி.சங்கரலிங்கம், திரு பல்லிகோட்டைசெல்லத்துரை, திரு ஆவின்.ரமேஷ்,
முன்னாள் எம்.எல்.ஏ திரு சுப்பயைாபாண்டியன், திரு மகபூப்ஜான், திரு கபேரியல்ராஜன்,திரு.சேர்மபாண்டி,திரு ஆறுமுகம், திரு விஜயக்குமார், திரு நாராயணப்பெருமாள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:** செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.